| | | | |
|---|---|---|---|
| அசல் வழக்கு எண்.154/2019 | பி. சா . 1 | தேதி.01.02.2023 | |
| பெயர் | திரு. வரதராஜன் | வயது | 52 |
| த/பெ. | திரு.சுப்பையன் | முகவரி | 1/146, விஜயா நகர், காளம்பாளையம் கிராமம் |
| வட்டம் | மேட்டுப்பாளையம் | மாவட்டம் | கோயமுத்தூர் |
| | | | |

சாட்சி முன்னிலை உறுதிமொழி எடுக்கப்பட்டது

குறுக்கு விசாரணை

1. நான் எம்.ஏ.படித்துள்ளேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் அவர் 80 செண்ட் தான் வாங்கியுள்ளார், ஆனால் 94 செண்ட் கேட்டு வழக்கு போட்டுள்ளார். வழக்கில் சொல்லப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் படி சொத்தை விலைக்கு வாங்கியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அதிலுள்ள அளவுகள் தவறு. வழக்கு சொத்தானது புல எண். 486/1 ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். அந்த சர்வே நம்பரின் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 2.95 ஏக்கர் ஆகும். மேற்கண்ட சர்வே எண்ணில் வாதியானவர் 94 செண்ட் நிலத்தை விலைக்கு பெற்றுள்ளார் என்றால் தவறு. மேற்கண்ட சொத்தின் ஆரம்ப உரிமையாளர் யார் என்றால் சுவாமிநாதன், ரஞ்சித் குமார், ராதா ஆகியோர்.

**(வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது. )**

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

**Sd/- P.K.Sivakumar**

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.